## காந்தி உலக மையம் சார்பில்

# பிளாஸ்டிக் எதிர்ப்பு விழிப்புணர்வு பேரணி

கும்மிடிப்பூண்டி, மார்ச்.15–

காந்தி உலக மையம் சார்பில் பிளாஸ்டிக் எதிர்ப்பு விழிப்புணர்வு பேரணி கும்மிடிப்பூண்டி பஸ் நிலையத்தில் இருந்து தொடங்கியது. பேரணிக்கு காந்தி உலக மையம் நிறுவனர் ராஜேஷ் தலைமை தாங்கினார். மேலாண்மை இயக்குனர் விஜயலட்சுமி, நிர்வாகிகள் சியாம் சுந்தர், திலீப்குமார், பிரமோத் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மகாத்மா காந்தியின் தண்டி யாத்திரையில் கலந்து கொண்ட 78 பேர்களைப் போன்று இந்த பேரணியிலும் குர்தா உடை அணிந்து 78 பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

'பிளாஸ்டிக்கை எரிக்காதே, கேன்சரை உருவாக்காதே' 'பிளாஸ்டிக்கை ஒழிப்போம். நீர் வளத்தைக் காப்போம்' என்பன போன்ற கோஷங்களை பேரணியின் போது மாணவர்கள் எழுப்பினார்கள். மேலும் பிளாஸ்டிக்கை பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து பொதுமக்களிடம் துண்டு பிரசுரங்களும் வினியோகம் செய்யப்பட்டது. இந்த பேரணி ரெட்டம்பேடு சாலையில் முடிவடைந்தது.